# இது ஒரு யுத்தம்!
# [6:10-12]

*என் நண்பர்களில் ஒருவரான பில்லி என்பவர் காவலராகப் (போலீஸ்) பணியாற்றுகின்றார். நவம்பர் 1994ல் பில்லியும் சட்ட அமலாக்க அலுவலர்கள் சிலரும் இணைந்து, டெக்ஸாஸின் ஃபோர்ட் வொர்த் என்ற இடத்தில் இருந்த வீடு ஒன்றில் (குற்றவாளிகள் சிலரைக்) கைது செய்யும் நடவடிக்கையில் பணியாற்றிக் கொண்டிருந்தனர். குண்டுகள் சுடப்பட்டன. தோட்டா ஒன்று பில்லியின் காலை துளைத்தது. அந்தத் தோட்டா அவரின் உடலுக்குள்ளாகப் பயணித்த பொழுது, அது அவருடைய இரத்தக் குழாய் ஒன்றைத் தாக்கியது. பில்லி ஏறக்குறைய சாவுக்கேதுவாக இரத்தம் சிந்தினார். ஆயினும் அவர் பிழைத்துக் கொண்டார், தேவனுக்கு நன்றி!*

*பில்லி மயிரிழையில் உயிர் பிழைத்த நிகழ்ச்சியானது, பல ஆண்டுகளுக்கு முன்பு நான் காவலர் ஒருவரைப் பற்றி நான் பார்த்த திரைப்படம் ஒன்றை எனக்கு நினைவூட்டுகின்றது. அதில் ஒரு காட்சியில் அந்தக் காவலர் தனது கூட்டாளியொருவர் தோட்டாவினால் மரணத்திற்கேதுவாகத் துளைக்கப்பட்டு மருத்துவமனைப் படுக்கையில் இருக்கும் வேளையில் அவரருகே அமர்ந்திருந்தார். படுத்திருப்பவரின் மனைவியும் அங்கிருப்பாள். அவள் காவலரைப் பார்த்து, தன் கண்களில் கண்ணீருடன், "இதை நான் ஒருக்காலும் உய்த்துணரவில்லை ... இப்பொழுது வரை நான் அதை உண்மையில் ஒருக்காலும் புரிந்து கொள்ளவில்லை. அங்கே ஒரு யுத்தம் நடக்கின்றது அல்லவா?" என்று கூறுவாள்.*

*எபேசுவில் இருந்த கிறிஸ்தவர்களுக்குப் பவுல் தமது நிருபத்தை எழுதி முடிக்கையில், அவர் கிறிஸ்தவ வாழ்க்கை பற்றி ஏறக்குறைய இதே கூற்றையே கூறினார்: "இது ஒரு யுத்தமாக உள்ளது." வாழ்வினூடாக ஒரு சுலபமான பயணத்தை எதிர்பார்க்கக் கூடாது என்பதை நாம் அறியச் செய்தார். கிறிஸ்தவம் என்பது ஒரு போராட்டமாக, ஒரு யுத்தமாக, "முடிவு வரையிலும் ஒரு சண்டையாக" உள்ளது.*

*இயற்கைக்கு அப்பாற்பட்ட இந்த யுத்தத்தில் நம்மில் எவரும் நமது சொந்த முயற்சியினால் வெற்றியடைய இயலாது. தேவன் நமக்குத் தருகின்ற சர்வாயுதவர்க்கத்தின் பெலம் என்ற ஒரே வழியினால் மட்டுமே நாம் இந்த யுத்தத்தில் வெற்றியடைய முடியும்:*

> *கடைசியாக, என் சகோதரரே, கர்த்தரிலும் அவருடைய சத்துவத்தின் வல்லமையிலும் பலப்படுங்கள். நீங்கள் பிசாசின் தந்திரங்களோடு எதிர்த்து நிற்கத் திராணியுள்ளவர்களாகும்படி, தேவனுடைய*

*சர்வாயுதவர்க்கத்தையும் தரித்துக் கொள்ளுங்கள். ஏனெனில் மாம்சத் தோடும் இரத்தத்தோடுமல்ல, துரைத்தனங்களோடும் அதிகாரங் களோடும் இப்பிரபஞ்சத்தின் அந்தகார லோகாதிபதிகளோடும், வானமண்டலங்களிலுள்ள பொல்லாத ஆவிகளின் சேனைகளோடும் நமக்குப் போராட்டமுண்டு (6:10-12).*

பவுலின் வார்த்தைகள் நமக்கு, பின்வரும் காலங்கடந்த சத்தியத்தை அளிக்கின்றன: கிறிஸ்தவர்கள் சாத்தானுக்கெதிரான யுத்தத்தில், தேவனு டைய யுத்தத் திட்டத்தைச் செயல்படுத்தும் பொழுது வெற்றியடை கின்றனர்.

## யுத்தத்தில் வெற்றியடைய யுத்தத்திற்கு ஆயத்தம் செய்தல் அவசியமாகின்றது

ஆவிக்குரிய யுத்தத்தில் நமக்குத் தேவையான பலத்திற்கான ஆதார மூலம் நம்மிடத்திலிருந்து வருவதில்லை; இது தேவனிடத்திலிருந்து வருகின்றது. பவுல் "கர்த்தரிலும் அவருடைய சத்துவத்தின் வல்லமையிலும் பலப்படுங்கள்" என்று கூறினார். நேர்ப் பொருளில் அவர், "நாம் கர்த்தருக் குள் பலப்பட வேண்டும்" என்று அவர் கூறினார்.[1] நாம் "முரட்டுத்தனம்" உள்ளவர்களாக வேண்டும் என்றோ அல்லது நமது வலிமையைக் காண்பிக்க வேண்டும் என்றோ பவுல் கூறவில்லை. பிசாசின் தீமையான தொலைவான செயல்களை எதிர்த்து நிற்கக் கிடைக்கின்ற பலத்தின் ஒரே ஆதார மூலத்திலிருந்து அதைப் பெற்றுக் கொள்ளும்படி பவுல் நமக்கு வேண்டு கோள் விடுத்தார். இதைத் தெளிவாகக் கூறுவதென்றால், தேவனுடைய பலம் இல்லாத வரையில் நாம் நம்பிக்கையற்றவர்களாகவே இருக்கிறோம்.

தேவனுடைய பலத்துடன் (இருக்கையில்) நாம் இந்த யுத்தத்தில் வெற்றியடைய மிகச் சரியாகத் தேவையானவற்றைக் கொண்டுள்ளோம். தேவனுடைய பலத்தினால் நாம் கொண்டுள்ள நம்புதற்கரிய சாத்தியக் கூற்றினைப் பற்றிப் பவுல் கூறினார். அதிகாரம் 1ல் பவுல், "தாம் கிறிஸ்துவை மரித்தோரிலிருந்து எழுப்பி, அவரிடத்தில் நடப்பித்த தமது பலத்த சத்துவத்தின் வல்லமைப்படியே விசுவாசிக்கிறவர்களாகிய நம்மிடத்தில் காண்பிக்கும் தம்முடைய வல்லமையின் மகாமேன்மையான மகத்துவம்" (1:19) என்று குறிப்பிட்டார். இயேசுவை உயிர்ப்பித்த வல்லமையானது ஒவ்வொரு கிறிஸ்தவரும் பெற்றுக் கொள்ளக் கிடைப்பதாக உள்ளது.

நாம், தேவனுடைய வசனத்தை வாசிக்கையிலும் அதை நம் வாழ்வில் நடைமுறைப்படுத்துகையிலும் இந்த வல்லமையைக் காண்கின்றோம். நாம் ஜெபத்தில் தேவனைத் தேடுகையில் அவர் இந்த வல்லமையை நமக்குக் கிடைக்கச் செய்கின்றார். நாம் தேவனை ஆராதிக்கையில் அவருடைய வல்லமையைக் கண்டறிகின்றோம். சக கிறிஸ்தவர்களின் செல்வாக்கு, முன்மாதிரி மற்றும் உற்சாகப்படுத்துதல் ஆகியவற்றின் மூலமாகவும் தேவன் தமது வல்லமையைச் செயல்படுத்துகின்றார். நமது வாழ்வின் ஒவ்வொரு நாளிலும் அவருடைய பலத்தைப் பெறுவதன் மூலம் நாம் இந்த

*யுத்தத்திற்குத் தயாராக வேண்டியது அவசியமாகும்.*

*தேவன் நமக்கு அளிக்கின்ற பலத்தை நாம் எவ்வாறு பெற்றுக் கொள்ள முடியும் என்று பவுல் திட்டவட்டமாக எழுதினார்: "தேவனுடைய சர்வாயுதவர்க்கத்தையும் தரித்துக் கொள்ளுங்கள்" (6:11). "சர்வாயுத வர்க்கம்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள "panoplia" என்ற கிரேக்க வார்த்தையிலிருந்துதான் நாம்* "panoply" *(கவசம்) என்ற வார்த்தையைப் பெறுகின்றோம். இது முழுமையான ஆயுதத்தைக் குறிக்கின்றது. பவுல் தாம் பல முறைகள் கண்டிருந்த ஒன்றை - யுத்தத்திற்காகக் கனத்த ஆயுதம் அணிந்து, பகைவர்களைத் தாக்கத் தயாராக இருக்கும் படைவீரர் பற்றிய விஷயத்தை ஆவிக்குரிய வகையில் சித்தரித்தார். 6:13-20ல், அவர் இந்த ஆயுதங்கள் பற்றி விவரித்தார்.*

*ஆயுதத்தை அணிந்து கொள்ள வேண்டும் என்று பவுல் கட்டளை யிட்டார். அவரது வார்த்தைகளில் இருந்த அவசரத் தன்மையை உணருங் கள். அவரால் முடிந்ததென்றால் நம்மிடத்தில் அவர், "தந்தையர்களே, ஆயுதங்களை அணிந்து கொள்ளுங்கள். உங்கள் குடும்பங்களுக்காக யுத்தம் செய்ய அணிந்து கொள்ளுங்கள். தாய்மார்களே, ஆயுதத்தை அணிந்து கொள்ளுங்கள். இளம் வாலிபர்களே, சாத்தான் உங்களைத் தோற்கடித்து விடக் கூடாதபடிக்கு ஆயுதத்தை அணிந்து கொள்ளுங்கள். வயதான கிறிஸ்தவர்களே, ஆயுதங்களை அணிந்து கொள்ளுங்கள். உங்கள் வாழ்க்கை யின் முடிவு வேளையின் அருகில் உங்கள் காவல் உங்களை விட்டுச் சென்று விட அனுமதித்து விடாதீர்கள். யுத்தம் அப்போது(ம்) முடிந்திருப்பதில்லை. தேவனுடைய சர்வாயுதவர்க்கத்தைத் தரித்துக் கொள்ளுங்கள்" என்று தனிப்பட்ட வகையில் கூறியிருப்பார்.*

*பவுல் பின்வரும் வார்த்தைகளைக் கொண்டு இந்த யுத்தத்தின் நோக்கத்தை அடையாளப்படுத்தினார்: "நீங்கள் பிசாசின் தந்திரங்களோடு எதிர்த்து நிற்கத் திராணியுள்ளவர்களாகும்படி" (6:11அ). போதைப் பொருட்கள், மதுபானம், ஆபாச இலக்கியம், மற்றும் சூதாட்டம் ஆகியவை நம்முடைய தீர்க்கமான விரோதிகள் அல்ல. அவைகள் நமது உண்மையான விரோதியினால் பயன்படுத்தப்படும் ஆயுதங்களாக மட்டுமே உள்ளன. தனது எல்லா ஆயுதங்களுடன் நம்மிடத்தில் வருகின்ற விரோதி வல்லமை மிக்கவனாக இருக்கின்றான்! நாம் தேவனுடைய உதவியின்றி பிசாசின் கொலைச் செயல்களை எதிர்த்து நின்று பிழைக்க இயலாது. பிசாசானவன் மனிதர்களுக்கு மேலான பலம் பொருந்தியவனாக, தந்திரம் மிக்கவனாக, சூழ்ச்சித் திறனும் கொடூரமும் கொண்டவனாக இருக்கின்றான். எந்த ஒரு மனிதனும் பிசாசை எதிர்த்து யுத்தம் செய்து வெற்றி அடையவதற்கு இயேசுவின் மூலம் மட்டுமே வழி உள்ளது. இயேசுவுக்குள் தேவனுடைய உதவியின்றி எவரொருவரும் பிசாசுடனான யுத்தத்தில் தப்பிப் பிழைக்க முடியாது. பிசாசுடனான யுத்தத்தில் வெற்றியடைவதற்காக நமக்குத் தேவன் தம்முடைய பலத்தையும் ஆயுதத்தையும் கொடுக்கின்றார்.*

*படை வீரர்கள் யுத்த களத்தில் நுழைந்தவுடன், அவர்களுக்கு யுத்தத் திட்டம் ஒன்று தேவைப்படுகிறது. பவுல் யுத்தத் திட்டம் ஒன்றை நமக்குக் கொடுத்துள்ளார், மற்றும் நாம் மேற்கொள்ள வேண்டிய தயாரிப்புகள்*

பற்றியும் அவர் நமக்குக் கூறியுள்ளார். தேவனுடைய பலத்தைப் புறக் கணித்தல் அல்லது, அவருடைய சர்வாயுதவர்க்கத்தைத் தரித்துக் கொள்ளத் தவறுதல் என்பது ஆவிக்குரிய தற்கொலையாக உள்ளது. தேவனுடைய பலமும் ஆயுதமும் இன்றி வாழ்வினூடாகக் கடந்து செல்ல முயற்சி செய்கின்ற கிறிஸ்தவர்கள் உயிர் பிழைக்க மாட்டார்கள். உங்களையும் உங்கள் குடும்பத்தையும் விபத்து அல்லது நோயினால் இறந்தவர்களைப் போலாக்க அனுமதித்து விடாதீர்கள். "கர்த்தருக்குள் பலப்படுங்கள் ... தேவனுடைய சர்வாயுதவர்க்கத்தைத் தரித்துக் கொள்ளுங்கள்." தேவன் அளிக்கின்ற ஆவிக்குரிய ஆதாரமூலம் ஒவ்வொன்றையும் பயன்படுத்துவதன் மூலம் யுத்தத்திற்குத் தயாராகுங்கள். இது ஒன்றுதான் உங்களின் நம்பிக்கையாக உள்ளது!

## யுத்தத்தில் வெற்றியடைய எதிரியைப் பற்றிய அறிவு அவசியமாகின்றது

போராடச் செல்லும் முன்னதாக எதிரியைப் பற்றி உங்களால் முடிந்த எல்லாவற்றையும் நீங்கள் அறிந்து கொள்ள வேண்டும் என்று ஞானம் கூறுகின்றது. விளையாட்டுக் குழுக்கள் தங்கள் போட்டியாளரைப் பற்றித் தெரிந்து கொள்கிறார்கள். வியாபாரக்குழுக்கள் ஒரு விலையை முன் வைப்பதற்கு முன்பாக, தங்கள் போட்டியாளர்களைப் பற்றித் தங்களால் முடிந்த அளவுக்கு அறிந்து கொள்கின்றனர். படைத்தலைவர்கள் யுத்தத் திற்குத் தயாரித்துக் கொண்டிருக்கையில் எதிரியைப் பற்றி தங்களால் இயன்ற அளவுக்கு அதிக தகவல்களைச் சேகரித்துக் கொள்வார்கள். உங்களால் இயன்ற அளவுக்கு உங்களின் எதிரியைப் பற்றி அறிந்து கொள்ளுதல் என்பது வெற்றி பெறுவதற்கு இன்றியமையாத வியூகமாக உள்ளது.

விரோதியானவன் எவ்வளவு வல்லமை நிறைந்தவனாகவும் சூழ்ச்சி மிக்கவனாகவும் இருக்கிறான் என்பதற்கு கிறிஸ்தவர்கள் மதிப்பைத் தர வேண்டும் என்று பவுல் விரும்பினார். பவுல் இதை ஏன் செய்தார்? ஏனென்றால், நாம் பிசாசானவனை தயாரிப்பு இல்லாமல் எதிர்கொண்டால் அல்லது நம் வலுக்குறைந்த சொந்த பலத்தைத் தவிர வேறு ஆயுதம் எதுவும் இன்றி யுத்தத்திற்குச் சென்றால், பிசாசானவன் நம்மை அழித்து விடுவான்.

விரோதியைப் பற்றிய மூன்று உண்மைகளைப் பவுல் நமக்குக் கொடுத்தார். முதலாவது, நமது விரோதி பலம் பொருந்தியவனாக இருக்கின் றான். வசனம் 12, "ஏனெனில் மாம்சத்தோடும் இரத்தத்தோடுமல்ல, துரைத்தனங்களோடும் அதிகாரங்களோடும் இப்பிரபஞ்சத்தின் அந்தகார லோகாதிபதிகளோடும் வானமண்டலங்களிலுள்ள பொல்லாத ஆவிகளின் சேனைகளோடும் நமக்குப் போராட்டமுண்டு" என்று கூறுகின்றது. பவுல் விரோதியைப் பற்றி பலமிகுந்த (பின்வரும்) பட்டங்களைக் கொண்டு விவரித்தார்: "துரைத்தனம்," "அதிகாரம்," மற்றும் "சக்திகள்." இந்த இயற் பெயர்களைக் கொண்டு, பவுல் தம் சிந்தையில் கொண்டிருந்த யாவற்றை யும் நான் அறிவதில்லை, ஆனால் விரோதியானவன் கொண்டுள்ள மாபெரும் வல்லமை மற்றும் அதிகாரம் ஆகியவற்றிற்கு நம் கவனத்தைத் திருப்பப் பவுல்

சில வார்த்தைகளைப் பயன்படுத்தினார் என்பதை நான் அறிகின்றேன்.

பேய்த்தனமான இந்த வல்லமையைப் பற்றி வேதாகமம் சில உட்கண்ணோட்டங்களைத் தருகின்றது. இயேசுவே கூட, பிசாசானவன் இந்த உலகத்தின் இராஜ்யங்கள் யாவற்றையும் அவருக்குத் தர, தான் வல்லமை கொண்டிருந்ததாகக் கூறியபோது, அவனுடன் வழக்காடவில்லை (மத். 4:8, 9). பிசாசானவனை "இந்த உலகத்தின் அதிபதி" என்றும் இயேசு குறிப்பிட்டார் (யோவா. 12:31). பிசாசானவன், தேவனுக்கெதிராகவும் அவருக்கு கீழ்ப்படிகிறவர்களுக்கெதிராகவும் நிலையாக அமைந்து நிற்கின்றான். பிசாசானவனைப் பவுல், "இப்பிரபஞ்சத்தின் தேவன்" என்று அழைத்தார் (2 கொரி. 4:4). அவிசுவாசிகள் சுவிசேஷத்தின் ஒளியைக் காணக் கூடாதபடி அவர்களின் மனங்களை சாத்தானும் அவனுடைய தூதர்களும் குருடாக்கி வைத்துள்ளனர். இந்த விரோதியைப் பேதுரு, "யாரை விழுங்க லாமோ என்று வகை தேடிச் சுற்றித் திரியும் கெர்ச்சிக்கிற சிங்கத்திற்கு" ஒப்பிட்டார் (1 பேது. 5:8). "உலக முழுவதும் பொல்லாங்கனுக்குள் கிடக் கிறது" என்று யோவான் கூறினார் (1 யோவா. 5:19). இடைக்களம் எதுவும் இருப்பதில்லை. ஒன்று நீங்கள் கர்த்தராகிய இயேசுவின் கட்டுப்பாட்டின் கீழாகவோ அல்லது சாத்தானின் கட்டுப்பாட்டின் கீழாகவோ வாழ்ந்தாக வேண்டும்.

யாரேனும் சிலர், "இயேசு பிசாசானவனைத் தோற்கடித்து ஜெயங் கொண்டார் என்றல்லவா நான் நினைத்திருந்தேன்" என்று கூறலாம். ஆம், அவர் அவ்வாறே செய்தார். இருப்பினும், பிசாசும் அவனது அசுத்த ஆவி களும் தோல்வியை ஒப்புக் கொண்டிருக்கவில்லை. அவைகள் இன்னும் கடைசியாகவும் முழுமையாகவும் அழிக்கப்படவில்லை, எனவே அவைகள் மனித குலத்திற்கெதிரான தங்களின் "தேடி அழிக்கும்" ஊழியத்தில் ஒப்புக் கொடுத்தலுடன் நிலைநிற்கின்றன. அவைகள் தனி மனித வாழ்வுகளை அழிப்பதற்கு இன்னமும் கணிசமான வல்லமை கொண்டுள்ளன.

இரண்டாவது, விரோதியானவன் பொல்லாங்கனாக இருக்கின்றான். "வான மண்டலங்களிலுள்ள பொல்லாத ஆவிகளின் சேனைகளோடும் நமக்குப் போராட்டமுண்டு" (6:12ஆ). வல்லமை என்பது தன்னிலேயே நல்லது அல்லது கெட்டதை நிறைவேற்றப் பயன்படுத்தப்பட முடியும். நமது விரோதியும் அவனது கூட்டாளிகளும் அழிப்பதற்கு தங்கள் வல்லமையைப் பயன்படுத்துகின்றனர். அவர்கள் அதைத் துன்மார்க்கத்தின் திசையில் திருப்பி விடுகின்றனர். அவர்கள் இருளான இந்த உலகத்தின் வல்லமை களைப் பிரதிநிதித்துவப் படுத்துகின்றனர். அந்தகாரமே அவர்களின் ஆளுகைப் பகுதியாக உள்ளது. அவர்கள் மூர்க்கத்தனமான மற்றும் முற்றான துன்மார்க்கத்தினால், (தங்களால்) இயன்ற அளவுக்கு அதிகமான பேரழிவைத் தந்து சேதப்படுத்துகின்றனர்.

மூன்றாவது, விரோதியானவன் வஞ்சிக்கிறவனாக இருக்கின்றான். வசனம் 11ஐ மீண்டும் வாசியுங்கள். பவுல், "பிசாசின் தந்திரங்களோடு" எதிர்த்து நிற்கும் நிலைப்பாட்டைக் குறிப்பிட்டார். பிசாசு தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டு, "நான் தான் பிசாசு, உங்கள் வாழ்வை அழிப்ப தற்கும், உங்களை நரகத்திற்குக் கொண்டு செல்வதற்குமே நான் இங்கு

*வந்துள்ளேன்" என்று கூறிக் கொண்டிருக்க மாட்டான். அவன் இவ்வாறு மிகவும் நேரடியாக நம்மிடத்தில் வருவதில்லை. அவன் தந்திரங்களைப் பயன்படுத்துகின்றான். அவன் பொய்களை விரும்புகின்றான். அவன் வஞ்சனையில் மகிழ்கின்றான்.*

*வஞ்சனையின் எஜமானன் நம்மைப் பாவம் செய்ய வைப்பதற்கு,*

- *"இது அவ்வளவு மோசமானதல்ல. இது துன்பம் தராது" என்று நம்மை நம்பச் செய்கின்றான்.*
- *யாரும் இதைக் கண்டுபிடிக்கப் போவதில்லை, எப்படியும் தேவன் இதை மன்னிக்கத்தான் போகிறார் என்று நம்மை நம்பச் செய்கிறான்.*
- *அவன் நம்மைச் சோதிக்கின்ற விஷயம் நம்மை உண்மையில் திருப்தி செய்யும் என்று நம்மை நம்பச் செய்கின்றான்.*
- *நாம் அக்கறை கொண்டிராதபடி நமது ஆவிக்குரிய உறுதிப்பாடு களைப் பலம் குன்றச் செய்கின்றான்.*
- *நாம் உடனடியாக விடுதலையை மட்டும் விரும்பி அந்த விடுதலையை நமக்குக் கொடுக்கும் எதை வேண்டுமானாலும் செய்யுமளவுக்கு நம்மை மட்டுமீறிக் களைப்படையவும் இளைப்படையவும் செய்கின்றான்.*
- *இதற்கு மேலும் சரியானது என்ன என்பதை நாம் அறியாதபடிக்கு நமது சிந்தனையைத் திருகச் செய்கின்றான்.[2]*

*விரோதியானவன் வஞ்சனை மிகுந்தவனாக, வழி விலக்கிச் செல்பவனாக, சூழ்ச்சிக்காரனாக இருக்கின்றான். அவன் ஒளியில் தூதன் போல் வேஷமிடுகின்றான் (2 கொரி. 11:14). அவனுடைய நிபுணத்துவமிக்க முறைமைகள் சூழ்ச்சிகளின் பல்வேறு வடிவங்களை உட்படுத்துவதாக உள்ளது. அவனுக்கு எதிராக வெற்றியடைவதற்கு நாம் கொண்டுள்ள வாய்ப்புகள் யாவை? நமக்கு நாமே வாய்ப்புகள் எதையும் கொண்டிருப்ப தில்லை. தேவனின்றி நாம் அவனுடன் போராட முயற்சி செய்தால், நாம் தோற்றுப் போவோம். இது பவுலின் வேண்டுகோளினுடைய அவசரத் தன்மையை விளக்கப்படுத்துகின்றது. விரோதியின் பலத்தை நாம் அறிகையில், நமக்கு தேவன் எவ்வளவாகத் தேவை என்பதை நாம் உணருகின்றோம்.*

*சற்று நிதானித்து விரோதியைப் பற்றி நினைத்துப் பாருங்கள். துன் மார்க்கத்தின் சக்திகள் எவ்வளவு பலம் வாய்ந்தவையாக இருக்க வேண்டும் என்று நினைத்துப் பாருங்கள். பிசாசானவன் இந்த உலகத்தினுள் கொண்டு வந்த பொல்லாங்கு எத்தகையது என்று ஆழ்ந்த சிந்தித்துப் பாருங்கள். அவன் உங்களின் மீது தனது கண்ணை வைத்துள்ளான் என்பதை நினைவில் வையுங்கள். அவன் உங்களை விரும்புகின்றான், மற்றும் அவன் உங்களால் வெற்றிக் கொள்ளப்படுவதைக் காட்டிலும் அதிக பலம் வாய்ந்தவனாக இருக்கின்றான். பிசாசும் அவன் கூட்டாளிகளும் எவ்வளவு பொல்லாதவர் களாய் இருக்கின்றனர் என்பதைப் பற்றிச் சிந்தித்துப் பாருங்கள். அவர்கள் தேவன் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற ஒவ்வொன்றையும் எதிர்த்து நிற்கின்றனர், மற்றும் அவர்கள் உங்களைத் தங்களின் பக்கமாய் இழுக்க நாடுகின்றனர். அதை நீங்கள் முற்றிலுமாகப் புரிந்து கொள்கின்ற பொழுது,*

விரோதியானவன் எவ்வளவு வஞ்சகம் நிறைந்தவனாக இருக்கின்றான் என்பதையும் நினைத்துப் பாருங்கள். இந்தக் காலத்தின் பொல்லாத சக்திகள் உங்களைத் தேவனுக்கு எதிராக (மாறச்) செய்வதற்கு சாத்தியமான ஒவ்வொரு சூழ்ச்சியையும் பயன்படுத்தும். நாம் நமது விரோதியைப் புரிந்து கொள்ளும் விஷயத்தில் நமது கண்களை அகலத் திறந்து வைத்துக் கொள்ள வேண்டும்.

## முடிவுரை

கிறிஸ்தவர்கள் தங்களுக்கென்று தேவன் நியமித்து வைத்துள்ள அவருடைய யுத்தத்தின் திட்டத்தை நடைமுறைப்படுத்தும் பொழுது, பிசாசுடனான யுத்தத்தில் வெற்றியடைகின்றனர். இரண்டு விஷயங்களை நீங்கள் செய்யும்படிக்கு நான் உங்களைக் கேட்டுக் கொள்ளுகின்றேன். முதலாவது, நீங்கள் தனியாக நின்று பிசாசானவனை எதிர்த்து நிற்க முயற்சி செய்ய மாட்டீர்கள் என்றும், உங்கள் சுயபலத்தை சார்ந்திருக்க முயற்சி செய்வதை நிறுத்துவதுதான் உங்களுக்குத் தேவையானது போல் செயல்படுவீர்கள் என்றும் ஜெபத்தில் தேவனிடம் உறுதிப்படுத்துங்கள்.

இரண்டாவது, நாள் முழுவதும், ஒவ்வொரு நாளிலும் நீங்கள் தேவனுடைய பலத்தை நாடுவீர்களென்று ஜெபத்தில் தேவனிடம் (உங்களை) ஒப்புக் கொடுங்கள். அவருடைய சர்வாயுத வர்க்கம் உங்களுக்குத் தேவை என்பதை அறிக்கை செய்யுங்கள். உங்களைப் பெலப்படுத்தும்படியும் தேவனுடைய சர்வாயுதவர்க்கத்தை நீங்கள் தரித்துக் கொண்டு அதைப் பயன்படுத்த உதவும்படியும் தேவனிடத்தில் கேளுங்கள். நீங்கள் ஒரு யுத்தத்தில் - உண்மையில் வாழ்வா சாவா என்ற போராட்டத்தில், வெல்பவரே எல்லா போராட்டத்தையும் மேற்கொள்ளும்—இருப்பதை அன்றாடம் நினைவூட்டும்படிக்குத் தேவனிடத்தில் கேளுங்கள், மற்றும் இயேசுவுடன் வெற்றியடையும் பக்கம் இருப்பதே உங்கள் விருப்பமாயிருக்க வேண்டும்.

நவீன மொழியில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளபடியிலான, பவுலின் வார்த்தைகளை மீண்டும் ஒருமுறை ஆழ்ந்து சிந்தியுங்கள்:

> ... தேவன் பலமுள்ளவராயிருக்கின்றார், நீங்களும் பலமுள்ளவராயிருக்க வேண்டும் என்றுதான் அவர் விரும்புகின்றார். எனவே, எஜமானர் உங்களுக்கு நியமித்து வைத்துள்ள யாவற்றையும் - மிகச் சிறந்த பொருட்களால் ஆன ஆயுதங்கள் யாவற்றையும் எடுத்தக் கொள்ளுங்கள். மற்றும் அவற்றை நீங்கள், சாத்தான் உங்கள் வழியில் எறிகின்ற ஒவ்வொன்றிற்கும் எதிர்த்து நிற்கக் கூடும்படிக்குப் பயன்படுத்துங்கள். இது நாம் ஏதோ ஒரு மாலை நேர விளையாட்டுப் போட்டியைக் காணச் சென்று, வெளியில் வந்த பின்பு ஓரிரு மணிவேளையில் மறந்து போகின்ற விஷயம் அல்ல. இது பிசாசு மற்றும் அவனுடைய தூதர்கள் யாவருக்கும் எதிராக முடிவு வரையிலும் நடத்த வேண்டிய வாழ்வு அல்லது சாவு என்ற போராட்டமாக உள்ளது.
>
> ஆயத்தமாயிருங்கள். நீங்கள் உங்கள் சொந்த பெலத்தினால்

*கையாள முடிவதைக் காட்டிலும் அதிகமானவற்றிற்கு எதிராக எழுந்துள்ளீர்கள். எல்லாம் முடிந்த பின்பும் வெற்றிக் கூக்குரல் உங்கள் காலடியில் இன்னமும் இருக்கும்படிக்கு தேவன் தருகின்ற ஒவ்வொரு ஆயுதத்திலிருந்தும் உங்களால் பெற முடிந்த அளவு எல்லா உதவியையும் பெற்றுக் கொள்ளுங்கள் (6:10-13;* TM*).*

*இயேசுவும், கிறிஸ்தவர்களுக்கு அவர் அளிக்கும் பெலமும் இன்றி வாழ்வை வாழ்வதற்கு நீங்கள் முயற்சி செய்து கொண்டிருக்கின்றீர்களா? இயேசு இல்லாமல் நீங்கள் வெற்றியடைய இயலாது. அவரை நாடுங்கள். அவர் உங்களின் பெலமாயிருப்பார். பிசாசை எதிர்த்து நிற்க உங்களுக்கு அவர் பெலம் தருவார். அவர் தமது வெற்றியை உங்களுடன் பகிர்ந்து கொள்வார்.*

*இயேசு, தாம் அளிப்பதை நீங்கள் கட்டாயமாகப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்று வற்புறுத்துவதில்லை. நீங்கள் ஒரு முடிவெடுக்கும்படி அவர் உங்களை அனுமதிக்கின்றார். அந்தகாரத்தை எதிர்த்துப் போரிடுவதில் நீங்கள் இன்னும் ஒரு கணம் கூடத் தனியே செலவிடத் தேவையில்லை. இந்தப் பொல்லாத உலகமானது உங்களை அழித்து விடும். உங்களுக்கு இயேசு தேவை. அவர் உங்களை எடுத்துக் கொள்ளத் தயாராக உள்ளார், ஆனால் நீங்கள் அவரிடம், "இயேசுவே நீர் எனக்குத் தேவை, நீர் எனது பாவங்களுக்காக மரித்தீர். எனது பாவங்களைக் கழுவ ஞானஸ்நானம் பெறவும், உமது பெலத்தினால் நடக்கத் தொடங்கவும் நான் விரும்பு கின்றேன்" என்று கூறத் தயாராயிருக்க வேண்டும்.*

*அநேகமாக, சில கிறிஸ்தவர்கள் தேவனுடைய சர்வாயுதவர்க்கத்தைத் தரித்துக் கொள்ளாமலே ஆவிக்குரிய யுத்தங்களில் வெற்றியடைய முயற்சி செய்திருக்கக் கூடும். சாத்தான் உங்களை, தான் விரும்பிய இடத்தில் வைத்துக் கொண்டிருக்கின்றான்: ஆவிக்குரிய யுத்தம் பற்றி நீங்கள் அறிந்துள்ள யாவற்றையும் நீங்கள் புறக்கணிக்க வேண்டுமென்று அவன் விரும்புகின்றான். தேவனிடத்தில் திரும்புங்கள், பிசாசானவனை உங்களை விட்டு ஓடும்படி கூறுங்கள். தேவன் உங்களுக்கு பெலம் அளிக்கத் தயாராக இருக்கின்றார். அவர் சர்வாயுதவர்க்கத்தை தயாராக வைத்துள்ளார். நீங்கள் சரியான முடிவெடுக்க வேண்டும் என்பதற்காக அவர் காத்துக் கொண்டிருக்கின்றார்.*

---

*குறிப்புகள்*

[1]*Endunamoo என்பது கிரேக்க வினைச் சொல்லாக உள்ளது. இது வசனம் 10ல், நிகழ்கால, செயப்பாட்டுவினை கட்டளைச் சொல்லாகத் தோன்றுகின்றது, இது நமக்கு இரண்டு முக்கிய விஷயங்களை கூறுகின்றது. (1) "பலப்படுங்கள்" என்பது தொடர்ந்து, நிற்காமல் நமது பகுதியில் நடைபெற வேண்டியதாக உள்ளது; மற்றும், (2) இது நமக்கு நடைபெறும்படி நாம் அனுமதிக்கின்ற ஒன்றாக உள்ளது. நம்மை நாமே பலப்படுத்திக் கொள்வதில்லை; ஆனால் நம்மை பலப்படுத்த அனு மதிக்கின்றோம்.* [2]Max Anders, *The Good Life: Living With Meaning in a "Never-Enough" World* (Dallas: Word Publishing, 1993), 234.